**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**கற்றல் கையேடு - பரதநாட்டியம்**
**தரம் 10**

---

## தவணை 1

**நயத்தல்**

- மிருதங்கம், வயலின், வீணை, சுருதி, தாளம், புல்லாங்குழல் - நயத்தல்
- பயன்பாடு, இசையின் தன்மை, இசை, நடன நிகழ்ச்சியில் இசைக்கருவிகளின் முக்கியத்துவம்
- பரதநாட்டியத்திற்குரிய பக்கவாத்தியம் இனம் காணல்

**ஆக்கத்திறன்**

வாக்கியங்களுக்கு அபிநயம் அமைத்து அபிநயித்தல்

- அழகிய பூஞ்சோலையில் பூக்கள் மலர்ந்தன
- வண்டுகள் தேன் குடித்து மயங்கின
- பறவைகள் சிறகடித்துப் பறந்தன
- இடுப்பில் குடத்துடன் பெண் நடத்தல்
- கடற்கரையில் சிறுவர்கள் விளையாடினார்கள்

**செய்முறை**

- தெய் தெய் தாம் அடவு
  - சொற்கட்டு தெய் தெய் தாம் , ஆதிதாளம்
  - ஒரு அடவு மட்டும் உண்டு
  - இடது பக்கத்தில் ஆரம்பிக்கும்
  - அலபத்மம், கடகாமுகம், பதாக முத்திரைகள் பயன்படும்
  - அரைமண்டி, குதித்தல், தட்டுதல் பாத நிலைகள் இடம்பெறும்
- தித்தெய்ந்த தாதெய் அடவு
  - 3 அடவுகள் உண்டு
  - சொற்கட்டு தித்தெய்ந்த தாதெய், ஆதிதாளத்தில் அமைந்தது
  - பாய்ச்சல் அடவு எனப்படும், 3 ஆவது அடவினை கத்தி அடவு எனவும் அழைப்பர்
  - உத்பிலவன பேதம் அதிகமாகப் பயன்படும்
- தெய் தெய் தத்தா அடவு
- நீட்டல் அடவு எனப்படும், இதில் 3 அடவுகள் உள்ளன
- சொற்கட்டு தெய் தெய் தத்தா தித்தெய்தத்தா, ஆதிதாளத்தில் திஸ்ரநடையில் அமைந்தது

- கிடதகதரிகிடதொம்
- மகுடஅடவுகளில் ஒன்று
- தீர்மானங்கள், கோர்வைகளின் முடிவில் இடம் பெறும்
- சொற்கட்டு கிடதக தரிகிடதொம் தக கிடதக தரிகிட தொம் தகதிகு கிடதக தரிகிடதொம்
- அடவுச் சொற்கட்டு (நாட்டியச் சொற்கட்டு) தெய் திதிதெய் தெய்தெய் திதிதெய் தெய் தெய் தெய் திதிதெய் ஆகும் ரூபகதாளத்தில் இடம் பெறும்
- பதாகம், அலபத்மம் , முத்திரை பயன்படுத்தப்படுகிறது
- அரைமண்டி, தட்டுதல், மூலைக்கு நாட்டுதல் பாத நிலைகள் இடம் பெறும்

**அறிமுறை**

**பாத்திரப்பிராணன்**

- பாத்திர என்பது நடனமாடுபவர், பிராணன் என்பது உயிர்
- ஆடல் மகளுக்கு உயிர்நாடியாக இருக்க வேண்டிய 10 குணங்கள் ஆகும் அவை
- 1.ஜவக் - வேகம், 6.அஷ்ரமஹ - களைப்பின்மை,
- 2.ஸ்திரத்வம் - உறுதி, 7.மேதா - புத்திக்கூர்மை
- 3.ரேகா - வடிவமைப்பு 8.சிரத்தா - ஆர்வம்
- 4.ப்ரமரி - சுற்றி ஆடுதல், 9.வசோ - துல்லியமான உச்சரிப்பு,
- 5.திருஸ்டி - கண்பார்வை, 10.கீதம் - பாடும் ஆற்றல்
- பாத்திரப் பிராணன்களை பாத்திர அந்தப்பிராணன்கள் என்றும் அழைப்பதுண்டு

**பகிப்பிராணன்**

- ஆடல் மகளுக்கு பக்கபலமாக, துணையாக இருக்க வேண்டிய 8 அம்சங்கள்
- பகிப்பிராணன்களால் ஒரு நடன நிகழ்ச்சி சோபிக்கும்
- மத்தளம், தாளம், குழல், வீணை, சுருதி, கிண்கிணி கீதம், நட்டுவன் ஆகிய எட்டும் நர்த்தகியின் பகிப்பிராணன்களாகும்

**35 தாளச்சக்கரம்**

- அடிப்படையான தாளங்கள் 7 , இவையே சப்த தாளங்கள்
- தாளங்களின் செய்கைமுறையைக் காட்டும் அங்கங்களே திரியாங்கம் எனப்படும் லகு,திருதம்,அனுதிருதம் ஆகும்.
- இவற்றில் எல்லா தாளங்களிலும் உள்ள அங்கம் லகுவானது ஜாதி பேதங்களினால் 5 வகையான லகுக்களாக உருவாகின்றன.
- அவை திஸ்ரலகு-$1_3$ , சதுஸ்ர லகு-$1_4$ .கண்டலகு-$1_5$ ,மிஸ்ர லகு-$1_7$ ,சங்கீர்ண லகு-$1_9$
- ஆகவே 7தாளங்களும் ,ஒவ்வொன்றும் 5 லகுக்களின் பிரிவால் 7X5=35தாளங்கள் ஆகின்றன.
- உ+ம் துருவதாளத்தின் 5 வகையினை சக்கரத்தின் முலம் காட்டப்பட்டுள்ளது

| தாளம் | ஜாதி | அங்கஅடையாளம் | அட்சரஎண்ணிக்கை |
|---|---|---|---|
| துருவதாளம் | திஸ்ரம் | $1_3 0 1_3 1_3$ | 3+2+3+3=11 |
| துருவதாளம் | சதுஸ்ரம் | $1_4 0\ 1_4 1_4$ | 4+2+4+4=14 |
| துருவதாளம் | கண்டம் | $1_5 0\ 1_5 1_5$ | 5+2+5+5=17 |
| துருவதாளம் | மிஸ்ரம் | $1_7 0\ 1_7 1_7$ | 7+2+7+7=23 |
| துருவதாளம் | சங்கீர்ணம் | $1_9 0\ 1_9 1_9$ | 9+2+9+9=29 |

இவ்வாறு ஏனைய தாளங்களின் சக்கரங்களை அமைக்கவும்

**தர்மி** (நாட்டியதர்மி, லோகதர்மி)

- தர்மி என்பது வழக்கு, தர்மி 2 வகைப்படும், நாட்டியதர்மி, லோகதர்மி
- அபிநயங்களைச் சித்தரித்துக் காட்டும் வழக்கம் இரு வகையாக நோக்கப்படும்

நாட்டியதர்மி

- பரிசுத்தமான உணர்வுகளை முகபாவங்களாலும் முத்திரைகளாலும் வெளிப்படுத்திக் காட்டுதல்
  உ+ம் -கண்ணீர் சிந்துவதை அபிநயம் மூலம் - முகபாவனை, கைமுத்திரைகளினால் வெளிப்படுத்தல் (அழுவது போல் பாவனை செய்தல்)

லோகதர்மி

- உலகின் அன்றாட வாழ்க்கையின் நிகழ்வுகளோடு கூடியது
- இயற்கையாக நிகழும் விடயங்களை எடுத்து உணர்த்திக் காட்டுதல்
- நாடக வழக்கு
  உ+ம் - நடைமுறையில் அழுவதைக் காட்டுதல்(அழுது நடித்தல்)

**தசாவதாரக் கோட்பாடு**

- அவதாரம் என்பது மேலிருந்து கீழிறங்குதல்
- அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டுவதற்காக விஷ்ணுவால் எடுக்கப்படுட்ட அவதாரங்கள் 10.

1.மத்சய அவதாரம்

- மக்களை நல்வழிப்படுத்திய நால் வேதங்களை சத்திய விரதனிடம் இருந்து ஹயக்கிரீவன் என்னும் அசுரன் திருடிச் சென்று கடலுக்கடியில் ஒளித்து வைத்தான்.
- திருமால் மீன்வடிவாகி ஹயக்கிரீவனுடன் போர் புரிந்து வேதங்களை மீட்டு சத்திய விரதனிடம் கொடுத்து அருள் புரிந்தா

2.கூர்ம அவதாரம்

- தேவர்களை அசுரர்கள் துன்புறுத்திய போது விஷ்ணுவிடம் சென்று தேவர்கள் வேண்டினர்
- பாற்கடலைக் கடைந்து அமுதத்தை எடுத்து உண்டால் இறவா நிலை அடையலாம் எனக் கூறினார்
- அசுர்களும் தேவர்களும் பாற்கடலைக் கடைந்த போது மந்திரமலை சாயத் தொடங்கியது. (மந்திரமலையை மத்தாகவும் வாசுகிப் பாம்மை நாணாகவும் கொண்டு கடைந்தனர்)
- திருமால் ஆமை வடிவெடுத்து மந்திர மலையைத் தாங்கி பாற்கடல் கடைந்து அமிர்தம் பெற உதவினார்

3.வராக அவதாரம்

- இரணியட்சன் பூமியை பாயாகச் சுற்றி நீரினுள் (பாதாள லோகத்தில்) மறைத்து வைத்தான்
- திருமால் வராக அவதாரம் (பன்றி) எடுத்து நீரினுள் சென்று இரணியட்சனை அழித்து பூமியை அண்ட வெளியில் வைத்து அருள் புரிந்தார்

4.நரசிம்ம அவதாரம்

- இரணியன் என்ற அரக்கன் தேவர்களுக்கும் மக்களுக்கும் துன்பமிழைத்து வந்தான்
- மகன் பிரகலாதன் நாராயணனின் பக்தன்
- தந்தையின் எந்தத் தண்டனையையும் திருமாலின் அருளால் அவனைப் பாதிக்கவில்லை

- இரணியனின் அகங்காரத்தை அழிக்க திருமால் பாதி மிருகமாகவும் பாதி மனிதனாகவும் அவதரித்து ஹீநசந்தி வேளையில் வீட்டு வாசலில் எவ் ஆயுதமின்றியும் தன் நகங்களால் வயிற்றைக் கிழித்துக் கொன்று மக்களைக் காத்தருளினார்.

5.வாமன அவதாரம்

- மிக வலிமை கொண்ட மாவலிச் சக்கரவர்த்தி – தேவர்களை வருத்தினான்
- தான் செய்யும் யாகத்திற்கு வருகை தந்து யாசிப்பவர்ளுக்கு கேட்டதையெல்லாம் வாரி வழங்கினான்
- இவனின் அகந்தையை அடக்க திருமால் சிறு மனித (குள்ள வடிவம்) உரு எடுத்து மன்னனிடம் மூன்று அடி மண் மட்டுமே கேட்டு வர தருகின்றேன் என்றான்
- திருமால் 1ஆவது அடியால் உலகையும் 2 ஆவது அடியால் வானத்தையும் 3ஆவது அடி வைக்க இடமே இல்லை எனக் கேட்க தன் தலையைக் காட்டி அதில் வைக்குமாறு வேண்ட தலைமேல் வைத்து அவன் அகந்தையை அழித்து அருள் புரிந்தார்

6.பரசுதாம அவதாரம்

- ஜமதக்கினி ரேணுகாதேவி ஐந்தாவது மகனாகப் பிறந்தார்
- தந்தையின் ஆணைக்குக் கீழ்படிந்து தாயின் தலையைக் கொய்து தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினார்
- ஜமதக்கினி முனிவரைக் கொன்ற கார்த்த வீரியார்ச்சுனன் போன்ற தீயவர்களைக் கொன்று நல்லவர்களைக் காத்தருளினார்
- கோடரி – பரசு ஆயுதத்தை ஏந்தியவர்

7.ஸ்ரீராம அவதாரம்

- தசரதன், கோசலை மகனாகப் பிறந்து சீதையை மணந்து ஏகபத்தினி விரதனாக வாழ்ந்தார்.
- இராவணன் போன்ற அரக்கர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டினார்.

8.பலராம அவதாரம்

- நந்தகோபாலன், யசோதையின் குமாரராகப் பிறந்து கோகுலத்தில் வாழ்ந்தார்.
- கலப்பை ஆயுதம் ஏந்தி உழவுத் தொழிலின் மகிமையை உயர்த்தினார்.
- அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலை நாட்டினார்.

9.கிருஷ்ண அவதாரம்

- வாசுதேவர், ரோகினியின் எட்டாவது குழந்தையாகப் பிறந்து நந்தகோபன், யசோதை குழந்தையாகப் குழந்தையாகக் கோகுலத்தில் வளர்ந்தார்.
- தனது மாமனின் (கம்சன்) அட்டூழியங்களை அழித்து தர்மத்தை நிலை நாட்டினார்.
- இவ் அவதாரத்தில் கோபிகாஸ்திரிகளுடன் ஆடல், பாடல்களில் ஈடுபட்டார்.
- துரியோதனாதிகளை அழித்தார்.
- பாரதப் போரில் அர்ச்சுனனுக்கு சாரதியாகச் செயற்பட்டார்.
- பகவத்கீதையை அர்ச்சுனனுக்குப் போதித்தார்.

10.கல்கி அவதாரம்

- கலியுகத்தில் எடுக்கப் போகும் அவதாரம்.
- வெள்ளைக்குதிரையில் போர்வீரனைப் போல் எடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

✓ மனிதனாக எடுத்த அவதாரங்கள் வாமனன், பரசுராமர், இராமர், பலராமர், கிருஷ்ணன் ஆகிய அவதாரங்கள் ஆகும்.

**தவில்**

- கிராமிய இசைக்கருவிகளில் ஒன்று
- இரு வகைகள் உண்டு
  திமிரி – பெரிய உரு
  பாரி – சிறிய உரு
- மறுபெயர்கள் மங்களவாத்தியம், ராஜவாத்தியம்
- வலது கையால் அறைந்தும் இடது பக்கம் கழியினாற் கொட்டியும் வாசித்தல்
- பலா மரத்தினால் செய்யப்பட்டு இரு புறமும் தோலினால் போர்த்தப்பட்டிருக்கும்.
- வலது பக்கத்தினை வலந்தலை என்றும் இடது பக்கத்தினைத் தொப்பி என்றும் அழைப்பர். தொப்பியின் நடுவில் மார்ச்சனை தடவப்படும்
- ஆட்டுத்தோல், எருமை மாட்டுத்தோல் என்பன பயன்படுத்தப்படும்
- ஓவ்வொரு பக்கத்திலும் தோலால் சுற்றப்பட்ட மூங்கில் வளையம் காணப்படும்
- வுலப்பக்க்தை வலதுகை மணிக்கட்டு விரல்களால் தட்டுவர். இடது பக்கத்தை தவில்கழி(குச்சி) கொண்டு வாசிப்பர்
- தவில்கழி திருவாத்தி, பூவரசு, சந்தனமரம் கொண்டு செய்யப்படும்
- வுாசிப்பவர் தோளில் முன்பக்கம் தொங்க விட்டு நின்று வாசிப்பர், தற்காலத்தில் உட்கார்ந்து வாசிப்பர்
- தற்காலத்தில் வலது கையில் கூடு போட்டு வாசிக்கும் வழக்கம் உண்டு
- ஆலய வழிபாட்டிலும் மங்களகரமான நிகழ்வுகளிலும் வாசிக்கப்படும்
- நாதஸ்வரத்திற்கு துணைக்கருவியாகவும் பக்கவாத்தியமாகவும விளங்குகிறது.
- இசைக்குழுவிலும் நையாண்டி, உறுமிமேளம் போன்ற இசைக்குழுவிலும் சிறப்பான இடத்தைப் பெற்று வருகின்றது
- தவில் வாசித்து பிரபல்யமான இந்தியக் கலைஞர்கள் அம்மா சத்திரம் கண்ணுசாமிப் பிள்ளை, வழுவூர் முத்துவீரப்பிள்ளை, நீடா மங்கலம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
- இலங்கைக் கலைஞர்கள் அளவையூர் தட்சணாமூர்த்தி, இணுவில் சின்னராசா

**உடுக்கு**

- உடுக்கை, துடி, டமருகம் எனவும் அழைக்கப்படும்
- கிராமிய இசைக்கருவிகளில் ஒன்று
- சிற்றுருக்கை, பேருடுக்கை என இருவகைப்படும்
- சிவனது கையில் இருப்பது சிற்றுடுக்கை
- கோயில் விழாக்களிலும் வழிபாட்டிலும் முழங்கப்படுவது பேருடுக்கை
- மறுபெயர் இடைசுருங்கிய தோற்பறை, இருமுகப்பறை
- சிறப்பு சிவபெருமானின் திருக்கரத்தில் உடுக்கையைத் துடி என்றும் டமருகம் என்றும் அழைப்பர்
- நீண்ட வார்களினால் சுற்றிக் கட்டுவதனால் உடுக்கை எனப்பெயர் பெற்றது
- ஒரு அடி நீளமுள்ளது
- இருமுகங்களும் கன்றின் தோலினாற் போர்த்தப்பட்டிருக்கும்
- இரு வாயின் வளையங்களிலும் நீண்ட கயிறு மாறி மாறி சுற்றிக் கட்டப்பட்டு கயிறுகளைச் சுற்றி நடுவில் ஒரு கயிறு இருக்கும்.
- வாசிப்பவர் இந்த நாடாவை இடது கையினால் அழுத்திக கொடுக்கம் போது சுருதி அதிகமாக ஒலிக்கும்
- கரகம், காத்தவராயன் கூத்துக்கள், தெருப்பாடகர்கள். தேசிங்குராசன் கதை, நல்லதங்காள் கதை மற்றும் குறிசொல்வோரும் இவ்வாத்தியத்தைப் பயன்படுத்துவர்
- கிராமப் புறங்களில் பேய் அல்லது பிசாசுகள் விரட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்

**பந்தனை நல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை**

- தஞ்சை மாவட்டத்திலுள்ள கும்பகோணம் என்னும் ஊரிலுள்ள பந்தனை நல்லூர் என்னும் கிராமத்தில் 1869ஆம் பிறந்தார்
- தந்தையார் சூரியமூர்த்தி
- தாயார் தஞ்சை பொன்னையாவின் புத்திரி ஞானாம்பாள்
- இசைஞானம் கற்பித்தவர் மைத்துனரான குமாரசுவாமி நட்டுவனார்
- தழிழ்மொழியை இராமலிங்க வாத்தியாரிடமும் தெலுங்கு மொழியை வெங்கடசாமி வாத்தியாரிடமும் சமஸ்கிருத மொழியை ஆடுதுறை அறிஞர் குப்புசாமி கனகபாடிகளிடமும் கற்றார்
- சீர்காழி நாராயணபிள்ளையிடம் பிடிலைக் கற்றார்
- இளமையில் இசை வல்லுநராகவும் வயலின் வித்துவானாகவும் பரதநாட்டியத்தில் மென்மேலும் திறமையுடையவராகவும் விளங்கினார்
- மாமனார் கச்சோரி செய்யப்போகும் இடமெல்லாம் கூட்டிச் சென்றார்
- தஞ்சையில் குருகுல வாசம் செய்து மாமனாரின் மகளைத் திருமணம் செய்து பந்தணை நல்லூர் திரும்பினார்
- வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை, நட்டுவாங்கப் பயிற்சியில் சிறப்புப் பெற்றார்
- தீர்மானங்களை உருவாக்குவதில் நிகரற்றவர்
- கலாஷேத்திரத்தை உருவாக்கிய ருக்மணிதேவி அம்மையாருடன் பக்கபலமாக நின்று நடனக் கலையைக் காப்பாற்றினார்
- நாட்டியக்கலை மறுமலர்ச்சி அடையாத போது தேவதாஸி குடும்பங்களைச் சேர்ந்த இளம் பெண்களுக்கு நாட்டியமும் ஆண்களுக்கு நட்டுவாங்கமும் கற்பித்தார்
- ஆரம்ப கால மாணவியான கல்யாணி அம்பாளின் நாட்டியக் கச்சேரிக்குப் பிள்ளையவர்கள் நட்டுவாங்கம் செய்து வந்தார்
- ஜதிஸ்வரம், வர்ணம், பதம் தமிழில் 30ற்கும் மேற்பட்ட கீர்த்தனை என்பவற்றை இயற்றினார்
- தமிழ்நாடு 1948 இல் கும்ப கோணத்தில் பாராட்டுப்பத்திரமும் பொற்கிழியும் வழங்கியது
- வாழ்நாளின் இறுதிக்காலம் வரை எழும்பூர் வலிதகலை மன்றத்தின் கௌரவ முதல்வராக இருந்தார்
- பிற்காலத்தில் நடனம் கற்க வந்தவர்கள் வாலிபப் பருவத்தில் தன்னை அணுகாது வலுவிழந்த தள்ளாத வயதில் தன்னை அணுகி உயிரை வாங்குகிறார்களே என அங்கலாய்த்தார்
- சிறந்த சிவபக்தர் இடுப்பில் நாலுமுழம் வேட்டியும் சால்வையும் அணிந்திருப்பார்
- அன்புடன் ‘‘தாத்தா’’ என அழைத்தனர்
- 1955 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்

**தஞ்சைப் பெருங்கோயில்**

- கி.பி 10 ஆம் நூற்றாண்டில் இராஜராஜ சோழனால் தஞ்சாவூரில் கட்டப்பட்டது
- 1000 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டு தமிழரின் பாரம்பரிய சின்னமாக விளங்கியது
- ஆரம்பத்தில் இராஜ ராஜேஸ்வரம் என்றும் பின்னர் தஞ்சை நாயக்கர்கள் ஆண்ட போது தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்றும் 17ஆம், 18ஆம் நூற்றாண்டில் மராட்டிய மன்னர்களால் ஆளப்பட்ட போது பிரகதீஸ்வம் என்றும் அழைக்கப்பட்டது
- தென்னாட்டுக் கோயில்களில் மிகவும் உயர்ந்த கோபுரத்தைக் கொண்டுள்ளமையால் பெரியகோயில் என்று அழைக்கப்படுகிறது
- 12 அடி உயரமுடைய கலசம் கொண்டது
- நெடிதுயர்ந்த விமானத்தின் பெயர் ‘‘தட்சணமேரு’’
- பெரிய லிங்கத்திருமேனியின் உயரம் 13அடி முக்கிய கட்டடம் 150 அடி நீளம் கொண்டது

- மிகப்பிரம்மாண்டமான விமானம் எகிப்தியப் பிரமிட்டுக்களைப் போல கூர் நுனிக் கோபுரமாக அமைந்துள்ளது
- பிற்காலத்தில் கட்டப்பட்டவை தாழ்வாரம் நந்தி, மண்டபம், கருவூர்த்தேவர் கோயில், சுப்பிரமணியம் கோயில் என்பன
- கருவறைக்கு மேலே உயரமான விமானம் அமைத்தமை மாறுபாடான அமைப்பாக இருந்த காரணத்தினால் யுனெஸ்கோ பாரம்பரியச்சின்னமாக அறிவித்தது.
- அன்றாடக் கருமங்களைச் செய்வதற்கு பூசகர்களும் சிற்பிகளும், தேவார ஓதுவார்களும், இசைவாணர்களும், நடனமாதர்களும் பணியாட்களும் நியமிக்கப்பட்டனர்
- 14m உயரம் 7m நீளம் 3m அகலம் உடைய ஒரே கல்லால் ஆன பெரிய நந்தி காணப்படுகிறது
- 216 அடி கோயில் விமானம் முழுவதும் செப்புத் தகடுகளைப் போர்த்தி அதன் மேல் பொன் வேயப்பட்டது
- ஆயிரமாம் ஆண்டு நிகழ்வு தஞ்சை மாநகரில் 2010ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 25, 26 ஆகிய இரு நாட்களிலும் சிறப்புற நடாத்தப்பட்டது
- கலாநிதி பத்மா சுப்பிரமணியத்தின் தலைமையில் இலங்கை, இந்திய பரத நாட்டியக் கலைஞர்கள் கலந்து கொண்ட மாபெரும் நடன நிகழ்ச்சி நடைபெற்றது
- கற்றூண்களில் நடன மங்கைகளின் உருவம் செதுக்கப்பட்டுள்ளது
- விமானத்தின் இரண்டாம் தளத்தில் 108 கரணங்களில் 81 கரண சிற்பங்கள் நடராஜரே ஆடிக்காட்டுவது போல் வடிவமைக்கப்பட்டுள்ளது
- மகாமேரு – வான்கைலாயம் என்றும் தட்சினை மேரு – தென்னாட்டு மலை என்றும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது
- வான்கைலாயம் ஊனக்கண்ணால் தரிசிக்க முடியாது – பொன்மலை
- நாட்டியத்திற்காக தனிமண்டபம் அமைக்கப்பட்டு 407 நாட்டிய நங்கையரும் 7 நட்டுவனாரும் நியமிக்கப்பட்டிருந்தனர்
- இராஜ ராஜ சோழ மன்னனுக்கு பாண்டீக்குலாசனி, சத்ரிய சிகாமணி, கேரலாந்தான், அருள் மொழித்தேவன், சிவபாதசேகரன் என்னும் விருதுப் பெயர்கள் வழங்கப்பட்டன
- கோயிலைக் கட்டி எழுப்பிய முதன்மைச் சிற்பி "குஞ்சரமல்லன்" ஆவான்
- 2020 ஆம் ஆண்டு மாசி மாதம் 05 ஆம் திகதி 23 ஆண்டுகளுக்கு பிறகு கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது
- இக்கோயில் தமிழக வரலாறு, கலை, கலசாரம் பண்பாடு ஆகியவை பொதிந்து கிடக்கும் பெட்டகமாகும்



# தவணை 2

1. **நயத்தல்**

➢ அருவி வெட்டு நடனம்

- தொழில்சார் நடனம்
- அரிவி வெட்டும் காலத்தில் ஆண்களாலும் பெண்களாலும் ஆடப்படும்.
- கையில் வளைந்த கத்தியை (அரிவாள்) வைத்துக் கொண்டு ஆடுவர்.
- பாடல் புதிய தானியத்தை வரவேற்பதாகவும் நல்ல அறுவடை நடைபெற வேண்டும் என்று வேண்டுவதாகவும் பொருள்பட அமைந்திருக்கும்

➢ மீனவ நடனம்

- மீனவரின் வாழ்க்கை முறையை சித்தரிப்பது.
- ஆண்கள் சாரம் அணிந்தும் பெண்கள் சாதாரண சேலை அணிந்தும் ஆடுவர்.
- ஆண்கள் தலையில் ஓலைத்தொப்பி / தலைப்பாகை அணிவர்.
- பாடலமைப்பு "ஏலேலோ" என்ற சந்தத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்கும்.
- பக்கவாத்தியம் தபேலா, ஹார்மோனியம் பயன்படுத்தப்படும்.

➢ தேயிலைக் கொழுந்து நடனம்

- கொழுந்து கொய்யும் சமூகத்தினரின் வாழ்க்கை முறை கற்காணிமார், கணக்குப்பிள்ளை, தோட்டத்துரைமார் ஆகியோரால் ஏற்படும் பாலியல் சேட்டைகள் போன்றனவற்றைக் குறிப்பதாக அமையும்.
- பெண்கள் சாதாரண புடவை உடுத்தி இடையில் கம்பாயம் கட்டி தலையில் கோணி(சாக்கு/ உரப்பை) அணிந்து முதுகில் பிரம்பினால் பின்னப்பட்ட கூடையையும் கையில் நீண்ட மூங்கில் குச்சியையும் வைத்திருப்பர்.
- கை நிறைய றப்பர் வளையல்கள், கழுத்தில் முத்துமாலைகள், மூக்கில் மூக்குத்தி, நத்து, காதில் சிமிக்கி, தோடு, காலில் மெட்டி, காற்சங்கிலி என்பனவும் அணிந்து ஆடுவர்.
- தப்பு வாத்தியம் பயன்படும்.

இந்நடனங்களை நயந்து ஆடல்முறை, ஆடை, அணிகலன்கள், ஒப்பனை, பக்கவாத்தியம் போன்றவற்றை இனங்காண்பர்

2. **ஆக்கத்திறன்** - ஆதி,ரூபக தாளங்களில் கோர்வை அமைத்து ஆடுதல்

ஆதிதாளம்

| /4 | O | O |
|---|---|---|
| தெய்,யும், தத்,த, தெய்,யும், தாம் ; /<br>தத்,தெய், தாஹாதித், தெய், தாஹா / | தெய்,ஹத், தெய்,ஹி, /<br>தெய் தெய் தாம் தெய்<br>தெய் திதி தெய் / | தெய்,ஹத், தெய்,ஹி, //<br>தெய் தெய் திதி தெய்<br>தெய் தெய் திதி தெய் // |

ரூபகதாளம்

| 0 | /4 |
|---|---|
| தா தெய், தெய், த, /<br>தெய்தெய்திதிதெய் தத்தெய்தஹ / | தித்,தெய்,தெய்,த, தெய்ஹத்தெய்ஹி தெய்ஹத்தெய்ஹி //<br>தித்தெய்தஹ தகததிங்கிணதொம் தகததிங்கிணதொம்<br>தகததிங்கிணதொம் // |

**செய்முறை**

1. திஸ்ர அலாரிப்பு முற்பகுதி அபிநயித்தல்
2. ஸம்யுத ஹஸ்த விநியோகம்
    - சங்கு, சக்கரம், சம்புடம், பாஷம், கீலகம், மற்சயம், கூர்மம், வராகம், கருடன், நாகபந்தம், கட்வா, பேருண்டம், அவகித்த விநியோகங்களை அபிநயித்தல்

**அறிமுறை**

அடவுகளின் சொற்கட்டுகளை தாள அங்கக் குறியீட்டுடன் எழுதுதல்

1. தெய்தெய்தாம் அடவு -ஆதிதாளம்
2. தித்தெய்ந்த தாதெய் -ஆதிதாளம்
3. கிடதக தரிகிடதொம் - சதுஸ்ரஜாதி ரூபகதாளம்

| 0 | /4 |
|---|---|
| கிடதக தரிகிட /<br>தொம் , ;த, க, /<br>கிடதகதரிகிட தொம், தக /<br>கிடதகதரிகிட தொம் தக<br>கிடதகதரிகிட தொம் தக/ | தொம் , ;த, க, கிடதக தரிகிட //<br>தி,கு, கிடதக தரிகிட தொம், ; //<br>கிடதக தரிகிட தொம், தகதிகு கிடதக தரிகிட தொம், //<br>திகு கிடதகதரிகிட தொம் கிடதகதரிகிட தொம் தக<br>கிடதகதரிகிட தொம் தகதிகு கிடதகதரிகிட தொம் // |

4. ஜதிஸ்வரம் இலட்சணம்
    - பரதநாட்டியக் கச்சேரி உருப்படிகளில் இரண்டாவதாக அமைந்துள்ளது
    - நிருத்த உருப்படி
    - ஜதியும் ஸ்வரமும் இணைந்து வருவதால் ஜதிஸ்வரம் எனப்பட்டது
    - பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகளைக் கொண்டது
    - ஆரம்பத்தில் தீர்மானமும் 4 அல்லது 5 கோர்வைகளையும் கொண்டிருக்கும்
    - கோர்வைகளுக்கடையே உருப்படியை மெருகூட்டுவதற்காக மெய்யடவு சேர்க்கப்பட்டிருக்கும்
    - பல இராகங்களிலும் பல தாளங்களிலும் அமைந்துள்ளது
    - ஸ்வரமாலை, ஸ்வரபல்லவி எனவும் அழைப்பர்
    - பொன்னையாபிள்ளை, ஸ்வாதித் திருநாள் மகாராஜா போன்றோர் இயற்றியுள்ளனர்

**கலாச்சாரப்பின்னணி**

1. கிராமத்தில் கூத்து உருவாகும் முறை

நாட்டுக்கூத்து உருவாகும் முறை

- ➢ பல்வேறு பிரதேசங்களில் வாழும் மக்களால் அவர்களின் பண்பாடு, கலாசாரம், பாரம்பரியங்களிற்கு ஏற்றவாறு பரம்பரையாகவும் மரபு வழியாகவும் ஆடப்படும் ஆடல் கூத்து
- ➢ உலகில் மனித இனம் தோன்றிய நாளையே நாட்டார் வழக்கியலின் ஆரம்ப நாள் என்பர்.
- ➢ நாட்டார் என்ற சொல் படித்த, படிக்காத மக்கள் எல்லோரையும் குறிக்கும்.
- ➢ வழக்கியல் என்பது வாய்வழக்கிலுள்ள கதைகள், விடுகதைகள், பழமொழிகள் முதலியனவும் வழக்கத்திலுள்ள நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள், சடங்குகள் முதலியனவும் ஆகும்
- ➢ நாட்டுப்புற மக்கள் தமது உள்ளத்து உணர்வுகளை நகை, காதல், வீரம், கோபம், சோகம், அச்சம், விருப்பு, வெறுப்பு எனப் பல வகையாகவும் வெளிப்படுத்தினர்
- ➢ இருவகைப்படும்

- ▪ அகக்கூத்து – வேத்தியல்
- ▪ புறக்கூத்து – பொதுவியல்
  - ➢ பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடும்
    - ▪ காமன்கூத்து, அர்ச்சுனன்தபசு பொன்னர்சங்கர் கூத்து – மலையகம்
    - ▪ பறைமேளக்கூத்து – மட்டக்களப்பு பறையடிக்கும் மக்கள்
    - ▪ வசந்தன்கூத்து – மட்டக்களப்பு உழவன்
    - ▪ வடபாங்கு, தென்பாங்கு வாசாப்புக் கூத்து – மன்னார்
    - ▪ வடமோடி, தென்மோடி – யாழ்ப்பாணம், மட்டக்களப்பு
    - ▪ வடமோடி _ சிலாபம்
    - ▪ முல்லை மோடி(தென்மோடிக் கூத்து), கோவலன் கூத்து – முல்லைத்தீவு
    - ▪ மகிடிக்கூத்து – மட்டக்களப்பு
      மகிடிக் கூத்தின் இன்னொரு வகை ஈழத்தின் வடக்குப் பகுதியிலும் ஆடப்படுகிறது
  - ➢ கூத்தைப் பழக்குபவர் அண்ணாவியார்
  - ➢ நடைபெறும் இடம் களரி

1. கூத்து ஆற்றுகை செய்யப்படும் ஒழுங்குமுறை

- ▪ ஊருக்குச் சொல்லல்
  - ➢ ஆடவிரும்புவோர் பங்கு கொள்ளலாம் என ஊரவர்க்கு அறிவிப்பதன் மூலம் முழு ஊரையும் கூத்துக்குள் இழுக்கும் முயற்சி நடைபெறுகின்றது
- ▪ சட்டம் கொடுத்தல்
  - ➢ ஊர்ப் பொது மக்கள் சாட்சியாக கூத்தருக்கு அவர் ஆடவேண்டிய பாத்திரத்தை எழுதி வழங்குதல்.
- ▪ தினக்கூத்து
  - ➢ கிராம மக்கள் முன்னிலையில் தினமும் மாலை மூன்று அன்றேல் நான்கு மணி நேரம் அண்ணாவியார் கூத்தருக்கு ஆடல், பாடல் பழக்குவார்.
- ▪ சதங்கை அணிதல்
  - ➢ வெறும் காலுடன் ஆடியவர் சதங்கை அணிந்து ஆடப்பயிற்சி அளிக்கப்படும் விழா. வைபவமாக நடைபெறும்
- ▪ கிழமைக் கூத்து
  - ➢ முழுக்கிராமமும் அயற்கிராமமும் பங்கு கொள்ள சதங்கை அணிந்து வாரத்தில் ஒரு தடவை பகல் முழுவதும் முழுக் கூத்தையும் ஆடிப்பழகுதல்.

- அடுக்குப் பார்த்தல்
    - முழுக்கிராமமும் பங்கு கொள்ள வெள்ளுடுப்பு நிலையில் ஒரு முழு இரவும் ஒத்திகை பார்த்தல். கூத்துப் பிரதியில் எந்த இடத்தை எந்தளவு குறைக்கலாம் கூட்டலாம் என்பன தீர்மானிக்கப்படும். அரங்கேற்றத்திற்கான முந்திய நிலையில் உருவாக்கல்.
- அரங்கேற்றம்
    - விடிய விடிய உடை ஒப்பனையுடன் பெருவிழாவாக அரங்கேறும். கூத்தருக்கு மக்கள் பரிசுகள் வழங்குவர்.
- வீட்டுக்கு வீடு ஆடுதல்
    - கூத்துப் பார்க்கக் களரிக்கு வரமுடியாதவர்களை மனதில் வைத்து செய்யப்படும்.
- இரண்டாம் அரங்கேற்றம்
    - எவ்வித தடையுமின்றி முழுக்கூத்தும் நடைபெறும். கூத்துருவாக்கத்திற்கு 5—8 மாதம் வரை எடுக்கிறது. கூத்துருவாக்கம் அழகான முறையில் நடைபெறுவதையும் கிராமத்தவர் அனைவரும் ஏனைய கிராமத்தில் அதே சாதியினரும் ஒன்றுபடுவதையும் காண முடிகிறது.

2. வடமோடி, தென்மோடி கூத்துக்கள் வேறுபாடுகள்

| வடமோடி | தென்மோடி |
|---|---|
| 1. ஆரியக்கூத்து | 1. தமிழ்க்கூத்து |
| 2. இந்தியாவின் வடக்கில் இருந்து வந்தது. | 2. இந்தியாவின் தெற்கில் இருந்து வந்தது. |
| 3. வடநாட்டுப்பாணி | 3. தென்நாட்டுப்பாணி |
| 4. போர் சார்ந்த கதை | 4. காதல் சுவை சார்ந்தது. |
| 5. நுணுக்கம் குறைந்த விரைவான அசைவு கொண்ட ஆட்டம் | 5. நுணுக்கமான கடினமான ஆட்டம் |
| 6. வரவு ஆட்டம் பார்வையாளரை நோக்கியதாக இருக்கும். | 6. நான்கு புறமும் உள்ள பார்வையாளரை நோக்கியது. |
| 7. பாதத்தின் முழுப்பகுதியும் நிலத்தில் படும்படி உரஞ்சி ஆடுதல். | 7. பாதத்தின் முழுப்பகுதியும் நிலத்தில் படாதவாறு ஆடுதல். |
| 8. "தித்தித்தா" என்ற தாளம் ஆட்டத்திற்கு அடிப்படையானது. | 8. "தெய்யத்தாக சந்தத்துமி" என்ற தாளம் ஆட்டத்திற்கு அடிப்படையானது. |
| 9. விருத்தம் இழுத்துப் பாடும் முறை இல்லை. | 9. விருத்தம் இழுத்துப் பாடப்படும். |
| 10. நடிகர் வரவுப் பாடலைப் பாடி அறிமுகம் செய்வர். | 10. அண்ணாவியாருடன் பிற்பாட் டுக்காரமும் வரவுப் பாடலைப் பாடுவர். |
| 11. கந்தார்த்தம் என்ற பாவகையில் இருக்கும். | 11. தாழிசை, உலா, கலித்துறை போன்ற பாவினம் இருக்கும். |
| 12. பாரமான கண்ணாடி சருகை பதிக்கப்பட்ட கரப்புடுப்பு (வில்லுடுப்பு) | 12. மணிகள், பூக்கள் பொருந்திய பாரம் குறைந்த உடை. |
| 13. பாரங்கூடிய கிரீடம் அணிவர். | 13. பாரம் குறைந்த பூமுடி அணிவர். |
| 14. வில், அம்பு, தண்டாயுதம், கட்டாரி பயன்படும். | 14. வாள் பயன்படும். |
| 15. இராமாயண, மகாபாரத,இதிகாசக் கதைகள் கொண்டது. | 15. நாட்டார் கதைகள், கற்பனைக் கதைகள் கொண்டது. |

# தவணை 3

**நயத்தல்**

- ❖ பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சி ஒன்றினை பார்த்து நயத்தல்
- ❖ அந்நிகழ்ச்சி பற்றி விமர்சனக் கட்டுரை எழுதுதல்

**ஆக்கத்திறன்**

- ➢ தொழில் சார் நடனங்களை ஆக்கம் செய்தல்

- ▪ குறத்தி நடனம்
- ✓ மலைப்பிரதேசங்களில் வாழ்ந்தனர்.
- ✓ குறி சொல்லுதல், தினைப்புலம் காத்தல், கிழங்கு கல்லுதல், தேன் எடுத்தல், பச்சை குத்துதல், பாம்பாட்டுதல், குரங்காட்டுதல் போன்ற வாழ்க்கைப் பண்புகளைக் கொண்டிருந்தனர்.
- ✓ தமது பிரதேச வளங்களைப் புகழ்ந்து கூறுவதாக அமையும்.
- ✓ பாடல் துள்ளல் இசையில் அமைந்திருக்கும்.

- ▪ வேடுவ நடனம்
  - ✓ தொழில்சார் நடனம்.
  - ✓ ஆதிக்குடிகள் தமது வாழ்க்கையைச் சித்தரித்து ஆடுவது.
  - ✓ இலை, குழை, மரப்பட்டைகளால் ஆடை அணிவர்.
  - ✓ கையில் அம்பு, வில், போன்ற பொருட்களும் தடிகளையும் வைத்து ஆடுவர்.
  - ✓ கழுத்தில் அணியும் மாலை காட்டிலுள்ள பொருட்களைக் கொண்டு தயாரித்து அணிவர்.
  - ✓ பாடல் வீரச்சுவை கொண்டிருக்கும்.
  - ✓ ஹார்மோனியம், தபேலா பக்கவாத்தியமாகப் பயன்படும்.

- ▪ வாள் நடனம்
  - ✓ போரைக் குறிப்பதாக ஆடப்படும்.
  - ✓ கையில் வாளும் கேடயமும் உபயோகித்து ஆடப்படும்.
  - ✓ பாடல் வீரச்சுவை பொருந்தியதாக அமையும்.
  - ✓ பக்கவாத்தியம்-- ஹார்மோனியம், தபேலா, செண்டை, சங்கு, பேரிகை பயன்படும்.

**செய்முறை/ அறிமுறை**

பரத உருப்படிகளின் சொற்கட்டுகளைத் தாள, அங்க குறியீடுகளுடன் எழுதுதலும் ஆடிக்காட்டுதலும்

அலாரிப்பு

இராகம் - நாட்டை தாளம் - திஸ்ரஏகம்

ஜதிஸ்வரம்

சாவேரி - ரூபகம் அல்லது ஆரபி – ஆதி

- ✓ தீர்மானம், 1ஆவது, 2ஆவது கோர்வை ஆடுதல்

1. பாந்தவ்யஹஸ்தங்கள்

உறவுமுறையை அபிநயித்துக் காட்டும் ஹஸ்தங்கள்

- கணவன் - இடதுகை சிகரம் மார்பிற்கு முன் வலதுகை இடுப்பில்
- மனைவி – வலதுகை மிருகசீருஷம் மார்பிற்கு முன் இடதுகை இடுப்பில்
- தம்பதி - இடதுகை சிகரம் வலதுகை மிருகசீருஷம்
- தாய் - இடதுகை அர்த்தசந்திரனால் வயிற்றைத் தடவி பின் அதன் மேல் வலதுகையால் மகுளம் பிடித்த அலபத்மமாக்கி (பிறப்பு காட்ட) பின் இடதுகையில் மிருகசீர்ஷம்
- தந்தை – தாய்க்க செய்வத போல் செய்த பின் வலது கையில் சிகரம்
- மாமியார் - இருகையிலும் ஹம்ஸாசியம் பிடித்து தாலி கட்டுவது போல் செய்து பின்னர் தாய்க்குரிய அபிநயம்
- மாமனார் - இருகையிலும் ஹம்ஸாசியம் பிடித்து தாலி கட்டுவது போல் செய்து பின்னர் தந்தைக்குரிய அபிநயம்
- அண்ணன் தம்பி - இருகையிலும் மயூரம் பிடித்து இடதுகை மார்பிற்கு முன்னும் வலதுகை சற்றுக் கீழே சிறுபிள்ளை என்பதையும் காட்டல்
- மைத்துணன் - இடதுகை சிகரம் வலதுகை கர்த்தரிமுகம் மார்பிற்கு முன்
- மைத்துனி – மைத்துணன் கை பிடித்த பெிநயித்த பின் கர்த்தரிமுகத்தை மிருகசீருஷமாக மாற்றுதல்
- சக்களத்தி - பாஷஹஸ்தத்தை மார்பிற்கு முன் பிடித்து இருகைகளிலும் மிருகசீருஷம் நாட்டியாரம்பத்தில் பிடித்தல்

2. தசாவதாரஹஸ்தங்கள்

| ஹஸ்தம் | வலதுகை | இடதுகை |
|---|---|---|
| 1. மத்சய அவதாரம் | மத்சயம் | |
| 2. கூர்ம அவதாரம் | கூர்மம் | |
| 3. வராக அவதாரம் | வராகம் | |
| 4. நரசிம்ம அவதாரம் | திரிபதாகம் | சிம்ஹமுகம் |
| 5. வாமன அவதாரம் | முஷ்டி | முஷ்டி |
| 6. பரசுராம அவதாரம் | அர்த்தபதாகம் | அர்த்தச்சந்திரன் |
| 7. இராம அவதாரம் | கபித்தம் | சிகரம் |
| 8. புலராம அவதாரம் | பதாகம் | முஷ்டி |
| 9. ஶ்ரீகிருஷ்ண அவதாரம் | மிருகஷீர்சம் | மிருகஷீர்சம் |
| 10. கல்கி அவதாரம் | பதாகம் | திரிபதாகம் |

**கலாச்சாரப்பின்னணி**

1. சங்ககாலம்
    - கி. பி 1--- 3ஆம் நூற்றாண்டு
    - மக்களின் வாழ்வில் இசையும் நடனமும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன.
    - வேத்தியல், பொதுவியல் எனும் இரு நடனங்கள் காணப்பட்டன.
    - மன்னரும் கற்றறிந்தோரும் உள்ள அவையில் ஆடுவது வேத்தியல்.
    - பொது இடங்களில் ஆடும் நடனம் பொதுவியல்.
    - நடனம் கூத்து, ஆடல், குனிப்பு என அழைக்கப்பட்டது.
    - நடனம் ஆடுவோர் கோடியர், வைசியர், கூத்தர், கண்ணுலர், பொருநர், விறலியர், பரதர், நாடகக்கணிகையர் என அழைக்கப்பட்டனர்.
    - இக்கால நடனம் மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை என்பன அறிவிக்கும் சாதகமாகக் காணப்பட்டது.
    - மக்கள் குழுவாக வாழ்ந்ததால் குழுநடனங்களாகவே காணப்பட்டது.
    - மன்னரைக் காணச் செல்லும் விறலியர், கூத்தர் தனிநடனம் செய்தனர்.
    - கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை என்பன கூத்தரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.
    - இலக்கியங்கள் பட்டனப்பாலை அகநானூறு, புறநானூறு, பரிபாடல்
    - சங்ககால நடனம் மூன்று வகை
        - குரவை 7,8,9 பேர் கூடி நின்று ஆடுவது.
        - துணங்கை பெண்களால் ஆடப்படுவது.
        - வெறியாடல்-- பயன் கருதி வேலனை வெறியாடச் செய்தமை.
    - குரவை ஆடிய செய்தி எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களில் அறியலாம்.
    - வெறியாடும் பெண் கணிக்காரி, சாலினி, தேவராட்டி என அழைக்கப்பட்டாள்.
    - நடனம் அரங்கு, தெரு, மணலுள்ள இடம், வீட்டின் முன் பக்கத்தில் இடம் பெற்றது.
    - அடிப்படைப் பண்களாக மருதம், செவ்வழி, பாலை, குறிஞ்சி காணப்பட்டது.
    - கிளைப்பண்களாக நைவளம், காமரம், ஆம்பல் காணப்பட்டன.
    - பாணர், பாடினியர் இசைவாணர்களாகக் காணப்பட்டனர்.
    - இசைக்கருவிகள் வில், யாழ், பேரியாழ், பறை, சங்கு போன்றன.
    - மன்னர்கள் கலைஞர்களை ஆதரித்து பரிசுகளும் கௌரவங்களும் வழங்கியமையால் ஆடல் செழிப்புற்றுக் காணப்பட்டது.

தொகுப்பு - திருமதி தேவகுமாரி யோகேந்திரன் (ஆசிரியர்,யா/தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி)

திருமதி சிறிதேவி கண்ணதாசன் (ஆசிரியஆலோசகர், மா.க.தி)